# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 108/2014** **Date: 16.06.2026.**

**(DW1)- Murugan**

<u>வாதி தரப்பு குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**</u>

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் கையெழுத்தோ, கைரேகையோ இல்லை என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.5 கிரய ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்ட நபர்கள் இன்னார் என்று நிரூபித்த சாட்சியாக கையெழுத்துப்போட்ட நபர்கள் மோசடியான நபர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 கிரய ஆவணத்தில் 1ம் பிரதிவாதியைப் பொறுத்து ஆள்மாறாட்டம் செய்து மோசடியாக பதிவுச் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ. 5 ஆவணத்தில் 1ம்பிரதிவாதிக்கு எந்த கிரயத்தொகையும் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் சரியாக நினைவில்லை, ஆனால் முதல் சாட்சியத்திலேயே சொல்லிவிட்டேன். வா.சா.ஆ.5 மோசடியான ஆவணத்தின் அடிப்படையில் வாதிகளிடம் நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதியின் பெயரை வைத்து நான் பல மோசடிகள் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சாஆ.5 ஆவணத்தை தயார் செய்த நபர்கள் மற்றும் சாட்சிகளை நான் எனது தரப்பில் சாட்சியமாக விசாரிக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் விசாரணை செய்வார்கள். அவர்களை விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவர்களை நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் விசாரிக்க வேண்டியதில்லை, நீதிமன்றத்தில் விசாரிப்பார்கள். வா.சா.ஆ.5 ஆவணம் எந்த காலத்திலும் நடைமுறையில் ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. வாதிகளுக்கு எதிராக மோசடியான ஆவணங்கள் உற்பத்தி செய்து வாதிகளை கஷ்ட படுத்தவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**